

கழகத் துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தாயார் எம்.சாரதாம்பாள் மறைவையறிந்து, பெரம்பலூர் ரோஸ் கார்டன் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த சாரதாம்பாள் உடலுக்கு மலரஞ்சலி மரியாதை செலுத்தினார். இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ராஜ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளுவர் தினத்தையொட்டி, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்க வளாகத்தில் உள்ள அய்யனின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தி திருக்குறள் வாசித்தார். உடன் மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தமிழ்ச் சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தொழிலாளர் நலத்துறை சார்பில்

# ரூ.27.33 கோடியில் அலுவலகக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 17-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் ரூ.27.33 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள், அரசினர் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடங்கள், விடுதிக் கட்டடங்கள் மற்றும் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.01.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டம் வி.மருதூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் பட்டணம்காத்தான் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், விடுதிக்கட்டடங்கள் மற்றும் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம், என மொத்தம் 27 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்தார்.

தொழிலாளர் நலத்துறையானது தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதன் வாயிலாக, பரந்த மற்றும் பன்முகத் தன்மையுடைய அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா உழைக்கும் தொழிலாளர்களின் நலனை பாதுகாத்தல், நியாயமான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தை உறுதி செய்வதன் வாயிலாக உற்பத்தியை பெருக்குதல், தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை உறுதி செய்தல், துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்திவருகிறது.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம், இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம், ஈமச்சடங்கு போன்ற பல்வேறு நல உதவிகளை 20 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் வாயிலாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது.

**ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள்**

விழுப்புரம் மாவட்டம், வி.மருதூர் கிராமத்தில் தரை மற்றும் முதல் தளத்துடன், 3 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம்காத்தான் கிராமத்தில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 4 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்களை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இவ்வளாகத்தில், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்), தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகங்கள் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களான தொழிலாளர் துணை ஆய்வாளர், தொழிலாளர் உதவி ஆய்வாளர், முத்திரை ஆய்வாளர் அலுவலகங்கள் அமையப் பெற்றுள்ளன. இதன் மூலம், பொது மக்கள், தொழிலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் தங்களுடைய கோரிக்கைகள் மற்றும் விண்ணப்பங்களை அளிக்கவும், 20 உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் தங்களுடைய பதிவை புதுப்பிக்கவும், புதிதாக பதிவு செய்யவும், பணப் பயன்களைப் பெறவும் இயலும்.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்**

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம், மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறன் அதிகரிக்கும். இத்தகைய தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கிட புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை தொடங்குதல், அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய தொழிற் பிரிவுகளை தொடங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டம் - விராலிமலையில் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர்கள் தங்கும் விடுதிக்கட்டடம்;

சென்னை மாவட்டம் - வண்ணாரப்பேட்டை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 3 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய தொழிற் பிரிவுகளுக்கான கட்டடம்;

தஞ்சாவூர் மாவட்டம் - ஒரத்தநாட்டில் 4 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதிக் கட்டடம்;

சேலத்தில் 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்;

கிருஷ்ணகிரி மாவட்டம் - தேன்கனிக்கோட்டையில் 8 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம்;

என மொத்தம் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் (மு.கூ.பொ.) முனைவர் அதுல் ஆனந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீர ராகவ ராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் சமத்துவப் பொங்கல் விழா அனைத்து சமுதாயத்தினருடன் இணைந்து சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றியச் செயலாளர்கள் தி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர் மற்றும் மாநகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் ஆலோசனைப்படி அரூர் பேரூர் கழகம் சார்பில் பேரூர் கழகச் செயலாளர் முல்லைரவி தலைமையில் அரூர் பேருந்து நிலையத்தில் அண்ணா மணிமண்டபம் எதிரே புதுப் பானையில் பொங்கல் வைத்து சமத்துவப் பொங்கல் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. விழாவில் பேரூராட்சித் தலைவர் இந்திராணிதனபால், துணைத் தலைவர் சூர்யாதனபால், மாவட்ட துணைச் செயலாளர் செ.கிருஷ்ணகுமார், ஒன்றியச் செயலாளர்கள் வே.சௌந்தரராசு கோ.சந்திரமோகன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### சேலத்தில் கால்நடை – விலங்கின அறிவியலுக்கான

# ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 17-

**சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்ரோடு பகுதியில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் ரூ.564.44 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.1.2025 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்ரோடு பகுதியில் 1102.25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.564.44 கோடி செலவில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தையும், அதில் அமைக்கப்பட்டுள்ள நிர்வாகக் கட்டடம், நுழைவு வாயில் வளைவுகள், விருந்தினர் விடுதி மற்றும் 9 வளாகங்களையும், அதனைச் சார்ந்த 126 கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்திடவும், மேம்பட்ட தரமான மருத்துவச் சிகிச்சைகளை கால்நடைகளுக்கு அளிக்கவும், இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

**கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்!**

சேலம் மாவட்டம், தலை வாசல் கூட்ரோடு பகுதியில் 1102.25 ஏக்கர் நிலப்பரப்பில் 564.44 கோடி ரூபாய் செலவில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்த ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தில், நிர்வாக அலுவலகம், விருந்தி னர் மாளிகை மற்றும் நுழைவு வாயில், கால்நடை பண்ணை வளாகத்தில் நாட்டின மாடுகள் பிரிவு, வெள்ளாடுகள் பிரிவு, செம்மறியாடுகள் பிரிவு, நாட்டு கோழியின பிரிவுகள், நவீனகுஞ்சு பொரிப்பகம், கோழித் தீவன உற்பத்தி ஆலை ஆகியவையும், மீன் வளர்ப்பு செயல்முறை வளாகத்தில் மறுசுழற்சி முறையில் தீவிர மீன்குஞ்சுகள் உற்பத்தி பிரிவு, அலங்கார மீன் வளர்ப்பு பிரிவு, மீன் கழிவுகளை பயன்படுத்தி காய்கறி உற்பத்தி செய்யும் பிரிவு ஆகியவையும், நிர்வாகக் கட்டடம், வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகங்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதியுடன் கூடிய முதுநிலை கல்வி மையம், விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகத்தில் நவீன பயிற்சி வளாகம், ஒருங்கிணைந்த மாதிரி கால்நடை பண்ணைகள், கால்நடை மருத்துவ அலுவலர்கள் விடுதி, பண்ணையாளர் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதி, ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், உயிர் தொழில்நுட்ப பிரிவு கள், கால்நடை இனப் பெருக்கம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுடன் கூடிய ஆராய்ச்சி வளாகம், தொழில் துவக்கம் மற்றும் ஒருங்கிணைந்த தகவல் மைய வளாகம், பசுந் தீவன ஆராய்ச்சி வளாகம், பொதுமக்கள் கலந்துரையாடும் பகுதி, இறைச்சிக்கூடம் மற்றும் பதப்படுத்துதல் வளாகம் ஆகிய வளாகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கான கட்டமைப்பு பணிகள் நபார்டு தேசிய வேளாண் வளர்ச்சி வங்கி மூலம் 447.05 கோடி ரூபாய் கடனுதவி பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்திற் கென தேவையான கால்நடைகள், உபகரணங்கள், மருந்து பொருட்கள் மற்றும் இதர செலவினங்கள் ஆகியவற்றிற்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப் பட்டுள்ளது.

இவ்வாராய்ச்சி நிலையத்திற்கென 28.50 கோடி ரூபாய் செலவில் 110/22 கி.வோ. துணை மின்நிலையம் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.05.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையத்தின் பல்வேறு பிரிவுகளின் தேவைக்கான குடிநீரை வழங்க 262.16 கோடி ரூபாய் செலவில் சிறப்பு குடிநீர் வழங்கல் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு காவிரி ஆற்றிலிருந்து சேலம் மாவட்டம், கூடக்கல் கிராமத் தில் தண்ணீர் எடுக்கப்பட்டு பல்வேறு நீரேற்று நிலையங்கள் மூலமாக 156 கி.மீ தூரத்திற்கு குழாய்கள் மூலம் நீர் கொண்டு வரப்பட்டு, நாளொன்றுக்கு சுமார் ஒரு கோடி லிட்டர் தண்ணீர் வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் ஆண்டு தோறும் சுமார் 70 உயர்தர நாட்டின பசுக்கள், 500க்கும் மேற்பட்ட மேம்படுத்தப்பட்ட செம்மறி மற்றும் வெள்ளாட்டு குட்டிகள், 500 வெண்பன்றி குட்டிகள், 20 லட்சம் நாட்டுக்கோழி குஞ்சுகள் மற்றும் 20 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இதன்மூலம், நாட்டின பசுக்கள், ஆடுகள், கோழி இனங்கள் அழியாமல் பாதுகாக்கப்படுவதோடு, பண்ணை யாளர்கள் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கால்நடை களின் உற்பத்தி திறனை பெருக்கி, குறைந்த செலவில் தரமான பால், முட்டை மற்றும் இறைச்சி பொருட்கள் உற்பத்தி செய்ய இயலும்.

மேலும், கால்நடைப் பண்ணைகள் சார்ந்த தொழிலினை தொடங்க விழையும் தொழில் முனைவோருக் குத் தேவையான தகவல்கள் மற்றும் பயிற்சி பெற வாய்ப்புகள் அமையும். அத்துடன், ஆராய்ச்சி நிலையத்தில் வழங்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சி மூலம் ஆண்டுதோறும் 3,000 இளைஞர்கள் பயிற்சி பெற்று சிறந்த வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, தலைவாசல் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் க.கிருஷ்ண குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக சேலம் மாவட்டத்திலிருந்து சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தே. மலையரசன், டி.எம்.செல்வகணபதி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் மரு.பாரதி, சேலம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர்.இளங்கோ, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் இலுப்பூரில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாள் விழா தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆரூர்.மணிவண்ணன், குடியாத்தம் புவியரசி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தரசன், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் இரா.சங்கர், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், ஒன்றியக் குழு முன்னாள் துணைத்தலைவர் எஸ்.புருஷோத்தமதாஸ், மாவட்டப் பிரதிநிதி ஆர்.நடராஜன், ஒன்றிய துணைச் செயலாளர் ஏ.வேதநாயகம் மற்றும் பலர் உள்ளனர்.



தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகர தி.மு.க. சார்பில் சாதி மத பேதமின்றி அனைத்து சமூகத்தினருடன் இணைந்து சமத்துவப் பொங்கல் விழா மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன் ஏற்பாட்டில் மாநகரக் கழக அலுவலகத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன், மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., து.செல்வம், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.